மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆலங்குடி

அசல் வழக்கு எண். **74/2023**

2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 02 -ஆம் நாள் 1872ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின்படி வாதி பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | வசந்தா | கணவர் பெயர் | அர்ஜுணன் |
| கிராமம் | : | புளிச்சங்காடு கைகாட்டி | மாவட்டம் | புதுக்கோட்டை |
| வயது. | : | 56 | தொழில் | |

நாள் : 02.09.2025

வா.சா. 1

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் நான் சொன்னவைதான். எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். வழக்குரையில் கண்டுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1. வாதியின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. மனுதாரரின் வாக்காளர் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. மனுதாரரின் குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. தாவா சொத்தின் புகைப்பட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 10.03.2023 காவல் துறையில் கொடுத்த புகார் நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. வாதியின் கணவரின் இறப்புச் சான்றிதழ் நகல் வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. வாதியின் பேரக் குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது, எண்ணிக்கை-2) வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 16.03.2023 பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு அசல் வா.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).